சின்ன ஒபுளாபுரத்தில் வீட்டு மனைகள் ஒப்படை

*140 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், சின்ன ஒபுளாபுரம் சத்திரம் புறம்போக்கில் வீடு கட்டியுள்ளவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கு வதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கும்முடிப்பூண்டி துணை வட்டம், சின்ன ஒபுளாபுரம் கிராமத்தில் உள்ள புல எண்கள் 176/எ/5எ, 177/2 ஆகியவற்றில் 17 ஆக்கிரமிப்புகள் உள்ளன. அவற்றில் குடி யிருப்போர் இந்த நிலங்களை "சத்திரம் புறம்போக்கு" என்றும், தங்களுக்கு மனைப்பட்டா கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்கள். ஆனால் இந்த நிலங்கள் புஞ்சை பட்டா நிலங்கள் எனக் கிராமக் கணக்குகளில் காணப்படுகின்றன. ஆகவே இவற்றைத் தற்போது ஒப்படை செய்வதற்கில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தந்த குறிப்பிலிருந்து அந்தப் புஞ்சைப் புறம்போக்கு நிலங்கள் ஒப்படை செய்யப்பட இயலாது என்று தெரிகிறது. ஆனால் அங்கே இருக்கக் கூடியவர்கள் விவசாய கூலிகளாக நீண்டகாலமாக இருப்பதால் அவர்களுக்கு அந்த நிலத்தை ஒப்படை செய்வதுபற்றி மீண்டும் மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா: அந்த நிலங்கள் பட்டா நிலங்கள் என்றும், தங்களுக்கு அதிலே உரிமை உண்டு என்றும் 'சூட் நோட்டீஸ்' கொடுத்திருக்கிறார்கள். எனவே, வழக்கு முடிவடைவதற்கு முன்னால் பட்டா செய்ய இயலாது.

World Bank assistance for agricultural development

*141 *Q.*—Thiru N. DENNIS: }
Thiru P. SOUNDAARPANDIAN: } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any team of the World Bank had discussions with the State Government about the offer of financial assistance to the State Farm University at Coimbatore during May 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.